# ஈரான் மற்றும் இஸ்ரேல் தொடர்பான பயண ஆலோசனை குறித்த ஊடக கேள்விக்கு அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளரின் பதில்

மே 03, 2024

**ஈரான் மற்றும் இஸ்ரேல் தொடர்பான பயண ஆலோசனைகள் குறித்த ஊடகங்களின் கேள்விக்கு, அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளர் ஸ்ரீ ரந்தீர் ஜெய்ஸ்வால் அவர்கள் அளித்த பதிலானது:**

"நாங்கள் தொடர்ந்து இப்பகுதியில் நிலவும் சூழ்நிலையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறோம். ஈரானும் இஸ்ரேலும் பல நாட்களாக தங்களது வான்வெளியைத் திறந்து வைத்துள்ளன என்பதையும் நாங்கள் குறிப்பிட்டுள்ளோம். இந்த நாடுகளுக்குச் செல்லும் போது விழிப்புடன் இருக்குமாறும், இந்தியத் தூதரகத்துடன் தொடர்பில் இருக்குமாறும் இந்திய குடிமக்களுக்கு நாங்கள் அறிவுறுத்துகிறோம்."

**புது தில்லி**
**மே 03, 2024**